Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 11

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

16 ஜமாதியுஸ் ஸானி 1438 ஹிஜ்ரி கமரி 16 அமான் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

16 மார்ச் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து–லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளான். அதாவது அவன் எனக்கு மிகுந்த மகத்துவத்தை வழங்குவான். என் மீதுள்ள அன்பை உள்ளங்களில் அமரச் செய்வான். எனது இயக்கத்தை முழு பூமியிலும் பரவும்படி செய்வான். எல்லா பிரிவுகளின் மீதும் எனது பிரிவை வெற்றி பெறச் செய்வான். எனது பிரிவைச் சார்ந்த மக்கள் அறிவிலும் இறை ஞானத்திலும் எந்த அளவு சிறப்பினை பெறுவர் என்றால் அவர்கள் தமது உண்மையின் ஒளி மற்றும் தங்களிடமுள்ள ஆதாரங்கள் மற்றும் அடையாளங்களின் அடிப்படையில் எல்லாரது வாயையும் அடைத்து விடுவர். மேலும் ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்தே தண்ணீர் அருந்தும். மேலும் இந்த இயக்கம் வேகமாக வளரும்; மலரும். எதுவரையென்றால் பூமியில் முழுமையாகப் பரவி விடும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். ஆட்சேபனைக்கு இடமளிக்கின்ற ஒன்றிரண்டு எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் மட்டுமே அவர்களிடம் இருக்கின்றன. அவற்றுடன் நிபந்தனையும் கூறப்பட்டிருக்கின்றது. அவற்றைக் கண்டு அஞ்சுவதன் காரணமாக (அவை நிறைவேறுவதில்) தாமதம் ஏற்பட்டு விடுகின்றது. அவை தொடர்பாக இறைவனின் தொன்மையான சட்டம் இதுவாகும். அதாவது அவை தவ்பா, இஸ்திக்ஃபார், சதகா மற்றும் துஆவினால் அகல முடியும். ஆனால், அவற்றுடன் ஒப்பிடுகையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வேறு பல முன்னறிவிப்புகள் நிறைவேறியுள்ளன. அவற்றின் உண்மைக்கு பல இலட்சக்கணக்கான மக்கள் சாட்சிகளாக இருக்கின்றனர். ஒரு பிரிவு மட்டுமல்லாமல் எல்லா பிரிவுகளும், முஸ்லிம்களும், இந்துக்களும், கிறித்தவர்களும் அவற்றின் உண்மைக்கு சாட்சி பகர்கின்ற நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர். முன்னறிவிப்புகளின் ஒரு மகத்தான படையை - இலட்சக்கணக்கான மக்கள் அவற்றின் உண்மைக்கு சாட்சி பகர்கின்ற நிலையில் - அவற்றை ஒன்றுமற்றதாகக் கருதியவாறு அவற்றிலிருந்து எந்தப் பலனையும் பெறாமல் இருப்பதும் இறைவனின் தொன்மையான சட்டத்திற்கேற்ப எந்த எச்சரிக்கை வடிவிலான முன்னறிப்புகள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதோ அவற்றை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவதும் ஆகிய இவைதான் நேர்மையான செயலா ? இதே நிலை இருந்தால் எந்தவொரு நபியின் நபித்துவமும் நிலைபெற்றிருக்க முடியாது. ஏனென்றால், இந்த சம்பவங்களின் முன்மாதிரி ஒவ்வொரு நபித்துவத்திலும் காணப்படுகின்றது. எனவேதான் இந்த மக்கள் மார்க்கம் மற்றும் உண்மையின் பகைவர்களாக இருக்கின்றனர் என்று நான் கூறுகின்றேன். இப்போது கூட இந்த மக்களின் ஏதாவதொரு ஜமாஅத் உள்ளங்களை சரிசெய்தவாறு என்னிடம் வந்தால் நான் இப்போது கூட இந்த விஷயத்திற்காக அவர்களிடம் வந்து அவர்களது வீணான சந்தேகங்களுக்கு பதில் கூறுவதற்கு தயாராக இருக்கின்றேன். மேலும் எந்த அளவு இறைவன் அதிகமானோர் இருக்கும் ஒரு படையைப் போன்று எனக்கு சாட்சியாக முன்னறிவிப்புகளைத் தந்துள்ளான் என்பதையும் பகல் உதயமானது போன்று அவற்றின் உண்மை வெளிப்பட்டிருப்பதையும் அவர்களுக்கு காட்டுவேன். இந்த அறிவற்ற மவ்லவிகள் தங்களது கண்களை தெரிந்து கொண்டே மூடிக் கொள்கின்றனர் என்றால் மூடிக் கொள்ளட்டும். அவர்களால் உண்மைக்கு என்ன இழப்பு ஏற்படப் போகின்றது ? ஆனால் அந்தக் காலம் வருகின்றது. இன்னும் சொல்வதென்றால் அது அருகில் இருக்கின்றது. அப்போது ஃபிர்அவ்னின் இயல்பை உடைய பலரும் இந்த முன்னறிவிப்புகளை சிந்தித்துப் பார்ப்பதன் மூலம் மூழ்குவதிலிருந்து தப்பி விடுவர். நான் தாக்குதல்களுக்கு மேல் தாக்குதல்களைத் தொடுப்பேன். எதுவரையென்றால் நான் உமது உண்மையை உள்ளங்களில் அமரச் செய்வேன் என்று இறைவன் கூறுகின்றான்.

எனவே மவ்லவிகளே ! இறைவனுடன் சண்டை போடுவதற்கு உங்களுக்கு ஆற்றல் இருந்தால் சண்டை போடுங்கள். எனக்கு முன்னர் ஓர் ஏழை மனிதரான மர்யமின் மகனுடன் யூதர்கள் எவ்வாறெல்லாம் நடந்து கொண்டனர் ? எவ்வாறு தங்களது எண்ணத்திற்கேற்ப அவர்களை சிலுவையில் ஏற்றினர். ஆனால், இறைவன் அவர்களை சிலுவை மரணத்திலிருந்து காப்பாற்றினான். ஒரு காலம் இருந்தது. அப்போது அவர்கள் ஒரு சூழ்ச்சிக்காரராகவும் பொய்யராகவும் மட்டுமே கருதப்பட்டு வந்தார். பிறகு ஒரு காலம் வந்தது. அப்போது எந்த அளவு அவர்களது மகத்துவம் உள்ளங்களில் உருவாகியது என்றால் இப்போது நாற்பது கோடி மனிதர்கள் அவரை இறைவனாக ஏற்றுக் கொண்டிருக்-கின்றனர். இம்மக்கள் ஒரு பலவீனமான மனிதரை இறைவனாக்கி மறுக்கின்ற செயலைச் செய்திருந்தாலும் இது யூதர்களுக்கு தரப்பட்ட ஒரு பதிலாகும். அதாவது எந்த நபரை அம்மக்கள் ஒரு பொய்யரைப் போன்று கால்களுக்கு கீழே நசுக்கி விட விரும்பினார்களோ அதே மர்யமின் மகனாகிய இயேசு இப்போது நாற்பது கோடி மனிதர்கள் அவருக்கு சஜ்தா செய்கின்ற அந்த மகத்துவத்தை அடைந்து விட்டார். மேலும் அரசர்களின் கழுத்துக்கள் அவரது பெயருக்கு முன்னால் குனிகின்றன. மர்யமின் மகன் இயேசு போன்று ஷிர்க்கின் முன்னேற்றத்திற்கு நான் ஒரு வழியாக ஆகி விடக் கூடாது என்று நான் துஆ செய்திருந்தாலும் இறைவனும் அவ்வாறே செய்வான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். (அதாவது ஷிர்கின் முன்னேற்றத்திற்கு நான் வழியாக ஆகி விட மாட்டேன் என உறுதியாக நம்புகிறேன்.) ஆனால், இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளான். அதாவது, அவன் எனக்கு மிகுந்த மகத்துவத்தை வழங்குவான். என் மீதுள்ள அன்பை உள்ளங்களில் அமரச் செய்வான். எனது இயக்கத்தை முழு பூமியிலும் பரவும்படி செய்வான். எல்லா பிரிவுகளின் மீதும் எனது பிரிவை வெற்றி பெறச் செய்வான். எனது பிரிவைச் சார்ந்த மக்கள் அறிவிலும் இறை ஞானத்திலும் எந்த அளவு சிறப்பினை பெறுவர் என்றால் அவர்கள் தமது உண்மையின் ஒளி மற்றும் தங்களிடமுள்ள ஆதாரங்கள் மற்றும் அடையாளங்களின் அடிப்படையில் எல்லாரது வாயையும் அடைத்து விடுவர். மேலும் ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்தே தண்ணீர் அருந்தும். மேலும் இந்த இயக்கம் வேகமாக வளரும்; மலரும். எதுவரையென்றால், பூமியில் முழுமையாக பரவி விடும். பல தடைகளும் உருவாகும். சோதனைகள் வரும். ஆனால் இறைவன் எல்லாவற்றையும் இடையிலிருந்து அகற்றி விடுவான். தனது வாக்குறுதியை நிறைவேற்றி விடுவான். இறைவன் என்னை நோக்கி இவ்வாறு கூறினான். அதாவது நான் உமக்கு அருளுக்கு மேல் அருளை வழங்குவேன். எதுவரையென்றால் அரசர்கள் உமது ஆடைகளிலிருந்து அருளைத் தேடுவர்.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இக்காலத்தில் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறவும் அவனது மார்க்கத்தைப் புரியவும் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான அடியாருக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற அந்தஸ்தை வழங்கி அனுப்பினான். உண்மையான துடிப்புள்ளவர்கள் தங்களது மன நிம்மதிக்காக அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பைஅத்தில் வாருங்கள் என்று அவன் உலகிற்கு கூறினான். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுங்கள் என்றும் கூறினான். உங்களது இறை வணக்கங்களின் உண்மை நிலையைப் பெறுங்கள். உங்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் காட்சியைப் பாருங்கள் என்று கூறினான். நான் ஏற்கனவே கூறியதுபோன்று பல்வேறு வழிமுறைகள் மூலமாக உண்மையான துடிப்பு கொண்டவர்களுக்கு உண்மையின் பக்கம் இறைவன் வழிகாட்டுகிறான். மேலும் அவர்களின் ஈமானை அதிகரிக்கிறான்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இறந்த காலமும், நிகழ்காலமும் அத்தகைய சம்பவங்களால் நிறைந்துள்ளன. ஒவ்வொரு நாளும், உலகில் ஏதாவது ஊர், நகரம், நாடு ஆகியவற்றில் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன. இதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் இணைபவர்களாகிய இந்த புதியவர்களின் ஈமான் அதிகரிப்பதும், அதில் உறுதி ஏற்படுவதும் மட்டுமின்றி பழைய அஹ்மதிகள் மற்றும் பிறப்பு அஹ்மதிகளின் ஈமானும் அதனால் உறுதியடைகிறது; புத்துணர்ச்சி பெறுகின்றது. அவர்களின் ஈமான் அதிகரிக்கவும் அவை காரணமாக அமைகின்றன.

நல்ல இயல்பைக் கொண்டுள்ள மற்றும் உண்மையைத் தேடுகின்ற ஆன்மாக்களுக்கு நேர்வழியின் பக்கம் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வழிகாட்டல் கிடைத்திருப்பது மற்றும் அவர்களுக்கு கிடைத்திருக்கும் இறைவனின் ஆதரவு மற்றும் உதவி தொடர்பாக ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

எனக்கு பலர் கடிதம் எழுதுகிறார்கள். அதில் நாங்கள் எவ்வாறெல்லாம் அல்லாஹ்விடம் இருந்து மனநிறைவைப் பெற்றவாறு அடையாளத்தைப் பார்த்தவாறு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால் எங்கள் ஈமானை எவரும் அசைக்க முடியாது. மேலும், எங்களுக்கு வேறு ஆதாரமும் தேவையில்லை என்று எழுதியுள்ளனர்.

அல்லாஹ் பல்வேறு வழிகளின் மூலமாக மக்களுக்கு உண்மையை புரியவதற்கான வழியை திறக்கிறான். சில வேளை கனவுகளின் மூலமாகவும், சில வேளை தப்லீகின் மூலமாகவும், சில வேளை அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பற்றி ஏதாவது ஜமாஅத் புத்தகம் கிடைத்து அதனை படிப்பதன் மூலமாகவும், சிலவேளை ஓர் அஹ்மதியின் நல்லொழுக்கத்தின் தாக்கத்தால் மக்கள் அஹ்மதிய்யத் என்ற உண்மையான இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இக்காலத்தில் பலர் M.T.A மூலமாக உண்மையான இஸ்லாம் பற்றி தெரிந்து கொண்டு அஹ்மதிய்யத்தில் நுழைகின்றனர்.

நம்மில் ஒவ்வொருவரின் பணியாவது ஒரு வேதனையுடன் இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகில் பரப்பவும் ஒவ்வொருவரிடமும் கொண்டு சேர்க்கவும் துஆவும் செய்யுங்கள். முயற்சி செய்யுங்கள். இந்தப் பணி இன்று முஹம்மதிய்ய மஸீஹின் அடிமைகளின் பணியாகும். நமது பணியை அல்லாஹ் சுயமே எளிதாக்குகிறான். சிலருக்கு கனவுகள் மூலமாக வழிகாட்டுகிறான். சிலருக்கு வேறு வழியின் மூலமாக வழிகாட்டுகிறான். ஆகவே, நாம் பைஅத்தின் உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்றால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உதவியாளர்களில் ஒருவராக ஆகி விட வேண்டும்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**10 பிப்ரவரி 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **10 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

உலகியலில் மனிதன் மூழ்கிக் கொண்டு செல்வதை நாம் உலகத்தில் பெருமளவில் பார்க்க முடிகிறது. உலக வசதிகளைப் பெறுவதற்காக பதற்றமும், கூச்சலும் காணப்படுகின்றன. ஓர் ஓட்டப்பந்தயம் நடைபெறுகிறது. இறைவனும் மார்க்கமும் இரண்டாம் பட்சமாக்கப்பகிறது. இன்னும் சொல்வதென்றால், உலகவாதிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் அல்லாஹ்வையே மறுக்கிறார்கள். மார்க்கத்தை வீணான ஒன்றாக கருதுகிறார்கள் – நவூதுபில்லாஹ். ஆனால், அந்நிலையில் அல்லாஹ்வை தேடுபவர்கள், அல்லாஹ்வின் பக்கம் கொண்டு செல்லும் மார்க்கத்தைத் தேடுபவர்கள், அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்த விரும்புபவர்கள், உண்மையான மார்க்கத்தைக் கண்டறிய விரும்புபவர்கள், உண்மையான மார்க்கத்தைத் தேடி அதில் இணைய விரும்புபவர்கள் ஆகியோர் அதற்காக துஆவும் செய்கின்றனர். நிம்மதியிழக்கின்றனர். நிச்சயமாக அவர்கள் – அந்த நல்லடியார்கள் இந்த முயற்சியைச் செய்யும்போது அல்லாஹ்வும் அவர்களுக்கு வழிகாட்டுகிறான். நேர்வழியைக் காட்டுகிறான். பல்வேறு வழிகளில் அவர்களின் மனநிறைவுக்கும் ஏற்பாடு செய்கிறான். அவர்களின் ஈமான் மற்றும் நிச்சய உறுதியை அதிகமாக்குகிறான்.

இக்காலத்தில் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறவும் அவனது மார்க்கத்தைப் புரியவும் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான அடியாருக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற அந்தஸ்தை வழங்கி அனுப்பினான். உண்மையான துடிப்புள்ளவர்கள் தங்களது மன நிம்மதிக்காக அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பைஅத்தில் வாருங்கள் என்று அவன் உலகிற்கு கூறினான். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுங்கள் என்றும் கூறினான். உங்களது இறை வணக்கங்களின் உண்மை நிலையைப் பெறுங்கள். உங்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் காட்சியைப் பாருங்கள் என்று கூறினான். நான் ஏற்கனவே கூறியதுபோன்று பல்வேறு வழிமுறைகள் மூலமாக உண்மையான துடிப்பு கொண்டவர்களுக்கு உண்மையின் பக்கம் இறைவன் வழிகாட்டுகிறான். மேலும் அவர்களின் ஈமானை அதிகரிக்கிறான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இறந்த காலமும், நிகழ்காலமும் அத்தகைய சம்பவங்களால் நிறைந்துள்ளன. ஒவ்வொரு நாளும், உலகில் ஏதாவது ஊர், நகரம், நாடு ஆகியவற்றில் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன. இதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் இணைபவர்களாகிய இந்த புதியவர்களின் ஈமான் அதிகரிப்பதும், அதில் உறுதி ஏற்படுவதும் மட்டுமின்றி பழைய அஹ்மதிகள் மற்றும் பிறப்பு அஹ்மதிகளின் ஈமானும் அதனால் உறுதியடைகிறது; புத்துணர்ச்சி பெறுகின்றது. அவர்களின் ஈமான் அதிகரிக்கவும் அவை காரணமாக அமைகின்றது. இப்போது நான் மக்களின் சில அனுபவங்களை எடுத்துக்காட்டக் கூடிய சம்பவங்களைக் கூறுவேன். அவை அல்லாஹ் எவ்வாறு தனது அருளால் மக்களின் நேர்வழிக்கு ஏற்பாடு செய்கிறான் என்று காட்டுகின்றன.

கேம்பியாவின் அமீர் சாஹிப் ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்: நியாமினா ஈஸ்ட் மாவட்டத்தின் ஓர் ஊரில் சிஸ்டர் கானிஃபாட்டி என்ற பெண் இருக்கிறார். அவரது வயது 65. கடந்த பத்து வருடமாக பாதங்களில் வலியினால் துன்பப்பட்டு வந்தார். எங்கும் அவருக்கு குணம் கிடைக்கவில்லை. இந்த வலியினால் நடக்க இயலாமல் இருந்தார். சிகிச்சைக்காக தனது ஊரை விட்டு மிகத் தொலைவிலுள்ள பாங்சாங்கிற்குச் சென்றார். அங்கு தற்செயலாக M.T.A –வில் எனது குத்பாவைக் கேட்பதற்கான வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அவர் தனது ஊருக்குத் திரும்பி வந்தபோது, கனவில், நீர் டி.வி. –யில் பார்த்த மனிதரின் பின்னால் செல்க. ஏனெனில் அவர் உனக்கு சரியான ஈடேற்றத்தின் வழியைக் காட்டுகிறார் என்று ஒருவர் கூறுகிறார்.

இந்த வகையில் அப்பெண் பைஅத் செய்து விட்டார். அமீர் சாஹிப் அப்பெண் கூறியதாக எழுதுகிறார்: பைஅத் செய்த பிறகு அவரது பாதங்களின் வலி நீங்கி விட்டது. இதனால் இவரது ஈமான் அதிகரித்தது. அவர் முழு ஊரிலும் தப்லீக் செய்கிறார். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்த பரக்கத்தினால் அவரது வலி எவ்வாறு அகன்றது? என்று மக்களிடம் கூறுகிறார். அல்லாஹ் ஒருவரின் நன்மைக்குப் பதிலாக அவரை பாதுகாக்க விரும்பினால் அல்லது ஒருவரின் நற்செயல் அவனுக்கு பிடித்து விட்டால் அவருக்கு வியத்தகு முறையில் எல்லாம் வழிகாட்டுகிறான். அறிவீனமான படிப்பறிவற்ற கிராமத்துப் பெண்ணிற்கு அவளது உள்ளத்தில் எண்ணம் அவ்வாறு இருந்திருக்கும் என்று ஓர் உலகியல்வாதி கூறலாம். ஆனால் எவருக்கு அல்லாஹ் ஈமானின் செல்வத்தை வழங்கி உறுதிப்படுத்துகிறானோ அவர்கள் அத்தகைய உலகியல்வாதிகளை அறிவீனர்கள் என்று கருதுகின்றனர்.

இவ்வாறு மேற்கு ஆப்பிரிக்காவில் பிரெஞ்சு மொழி பேசும் நாடானா புர்கினோஃபாஸோ உள்ளது. இது சஹாரா பாலைவனத்திற்கு அருகில் உள்ளது. இன்னும் சொல்வதென்றால், பாலைவனத்தின் ஒரு பகுதி இந்த நாட்டுக்குள் அடங்கியுள்ளது. இந்த தூரத்து நாட்டில் வாழும் – நாடு மட்டும் தூரமல்ல. அந்த நாட்டிலும் ஒரு குக்கிராமத்தில் வாழக்கூடிய ஒரு மனிதருக்கு அல்லாஹ் எவ்வாறு வழிகாட்டுகிறான்?

இது குறித்து பொறுப்புப் பிரச்சாரகர் எழுதுகிறார்: லியோ மண்டலத்தின் ஜமாஅத்தைச் சார்ந்த நண்பர் ஸுவாதோ சாஹிப் ஜெர்மனிய ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். அவர் கூறுகிறார்: அவர் தொடர்ந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ரேடியோ கேட்டு வந்தார். ஜமாஅத்தின் குழு தப்லீக் செய்ய வந்தால் நான் அந்த ஊர்வாசி மற்றும் முக்கியப் பிரமுகர் என்ற முறையில் அவர்களை நான் நன்றாக கவனித்து வந்தேன். தப்லீகிற்காக ஏற்பாடும் செய்து தந்தேன் என்கிறார். இவர் அஹ்மதியாக இருக்கவில்லை. ஆனால் அஹ்மதிகளின் மீது அனுதாபம் கொண்டிருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு மவ்லவிகளுக்கு இது பற்றி தெரிய வந்தது. மவ்லவிமார்கள் என்னிடம், நீங்கள் அஹ்மதி ரேடியோவை முற்றிலும் கேட்காதீர்கள். அஹ்மதி –களுடன் சந்தித்து உறவாடுவதை விட்டு விடுங்கள். ஏனெனில் அவர்கள் உங்கள் இஸ்லாத்தைக் கெடுத்து விடுவர் என்று கூறினர். நானும் மவ்லவிகள் கூறியதற்கிணங்க அஹ்மதிகளை சந்திப்பதை விட்டு விட்டேன். அஹ்மதிகளின் ரேடியோவை கேட்பதையும் விட்டு விட்டேன்.

சிறிது காலத்திற்குப் பிறகு என்ன நடந்தது? என்றால் நான் ஒரு பயணத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். தொழுவதற்காக பள்ளிவாயில் இருந்த ஓரிடத்தில் நின்றேன். அது ஒரு சிறிய ஊராக இருந்தது. அங்கு ஒரு பள்ளிவாயிலும் இருந்தது. அங்கு தொழுகை ஆரம்பமாகி இருந்தது. எனவே, விரைவாக உளூ செய்தேன். அப்போது ஒரு மனிதர் பள்ளிவாயிலில் நுழைந்தார். அவர், இது அஹ்மதிகளின் ஊர்; இது அஹ்மதிகளின் மஸ்ஜித் என்று கூறினார்.

அவர் கூறுகிறார்: அவர் இவ்வாறு கூறியதும் நான் யோசிக்கத் தொடங்கினேன். நானோ நீண்ட காலமாக இவர்களை தவிர்த்து வந்தேன். பிறகு நான் மெதுவாக உளூ செய்தேன். அங்கு தொழுகை முடிந்த பிறகு தனியாக தொழலாம் என்று நினைத்தேன். எவ்வாறிருப்பினும், அவருக்கு தொழ வேண்டிய –தாயிற்று. அவரது ஏதோ ஒரு நன்மை அல்லாஹ்வுக்கு பிடித்திருக்கும் என்பதால் அவருக்கு நமது பள்ளிவாயிலில் தொழும் நிர்பந்தம் ஏற்பட்டது.

அவர் கூறுகிறார்: அதே இரவில் நான் கனவில் பார்த்தேன். பெருங்கூட்டம் ஒன்று இருக்கிறது. நான் அக்கூட்டத்தில் மக்களை விலக்கிக் கொண்டு முன்னால் போய் பார்க்கிறேன். அங்கு ஒரு மனிதர் நிற்கிறார். அவரைச் சுற்றி ஆயிரக்கணக்கானோர் நிற்கின்றனர். நான் ஒருவரிடம் கேட்கிறேன். மக்கள் எல்லாம் சுற்றி நிற்கிறார்களே? இவர் யார்? அதில் ஒருவர் கூறுகிறார். இவரது பேச்சைத்தான் நீர் கேட்க வேண்டும். ஆனால் மவ்லவிகள் உம்மை நேர்வழியை விட்டு அகற்றி விட்டனர். அதனைக் கேட்டதும் என் கண் திறந்தது என்கிறார். இந்தக் கனவின் தாக்கம் என் மீது எந்த அளவுக்கு ஏற்பட்டது என்றால் நான் அஹ்மதிகளுடன் மீண்டும் தொடர்பை புதுப்பித்தேன்.

பிறகு ஒருநாள் நான் மிஷன் ஹவுஸிற்கு ஃபோன் செய்து முரப்பி சாஹிபிடம், நான் பைஅத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினேன். முரப்பி சாஹிப் இன்ன நாளன்று மிஷன் ஹவுஸிற்கு வருமாறு கூறினார். நான் அந்த நாளில் மிஷன் ஹவுஸிற்குச் சென்றேன். அங்கு எல்லாரும் டிவி –யில் ஏதோ பார்த்துக் கொண்டிருந்தனர். நானும் முன்னால் போய் டிவி –யைப் பார்த்தேன். அங்கு கண்ட காட்சியால் வியந்து போனேன். நான் கனவில் கண்ட அதே காட்சிதான் டிவி –யிலும் காணப்பட்டது. கேட்ட போது முரப்பி சாஹிப் கூறினார். ஆண்டு மாநாட்டின் இறுதி உரை நடந்து கொண்டிருக்கிறது. எமது கலீஃபா சொற்பொழிவாற்றுகிறார்கள். உடனே நான் முரப்பி சாஹிபிடம், உடனே எனது பைஅத்தை வாங்குங்கள். இறைவன் மீது ஆணையாக! இதே காட்சியைத்தான், இதே மனிதரைத்தான் நான் கனவில் கண்டேன் என்று கூறினேன்.

அல்லாஹ்வின் அருளால் அவர் தமது குடும்பத்துடன் பைஅத் செய்து விட்டார். தனது ஊர்க்காரர்களிடம் தொடர்ந்து தப்லீக் செய்து கொண்டிருக்கிறார். ஒருவர் தனது இதுபோன்ற சொந்த அனுபவத்தைக் கடந்து செல்லும்போது அல்லாஹ்வின் வழிகாட்டல் அவருக்கு கிடைக்கும் போது, நிச்சயமாக அவர் தமது ஈமானில் உறுதியைப் பெற்றுக் கொண்டே செல்கிறார். எனக்கு பலர் கடிதம் எழுதுகிறார்கள். அதில் நாங்கள் எவ்வாறெல்லாம் அல்லாஹ்விடம் இருந்து மனநிறைவைப் பெற்றவாறு அடையாளத்தைப் பார்த்தவாறு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால் எங்கள் ஈமானை எவரும் அசைக்க முடியாது. மேலும், எங்களுக்கு வேறு ஆதாரமும் தேவையில்லை என்று எழுதியுள்ளனர்.

சிலர் எதிர்ப்பில் எந்த அளவுக்கு அதிகமாக பிடிவாதத்தில் இறங்குகிறார்கள் என்றால் அறிவுப்பூர்வமான கருத்துக்களைக் கேட்கவும் கூட விரும்புவதில்லை. ஆனால் சிலர் இவ்வாறும் உள்ளனர். அவர்கள் அகம்பாவம் கொண்டவர்களாக இருப்பதில்லை. அவர்களிடம் ஓரளவு மனித நேயம் இருக்கும். இன்னும் சொல்வதென்றால், பெருமளவில் மனித நேயம் இருக்கும். அகம்பாவம் இல்லாமலும் மனித நேயமுடையவராகவும் இருப்பவருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டி விடுகின்றான். அவர் அந்த வழிகாட்டலிலிருந்து பயனடைந்தால் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகி விடுகின்றனர். சிரியாவிலுள்ள அத்தகைய ஒரு மனிதரின் சம்பவம் வந்துள்ளது. அவர் முதலில் எதிர்ப்பில் முன்னேறி இருந்தார். ஆனால், உண்மையைப் பெறுவதற்காக இறைவனிடம் வழிகாட்டலைப் பெறும் எண்ணம் உருவானது. இன்னும் சொல்வதாயின், அந்த எண்ணம் ஊட்டப்பட்டது. பிறகு அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அவருக்கு வழிகாட்டலும் கிடைத்தது.

சிரியாவின் அஹ்மது சாஹிப் என்ற ஒருவர் கூறுகிறார்: எனக்கு அஹ்மதிகளுடன் தொடர்பு இருந்தது. அவர்களது வீடுகளுக்கு போய் வந்து இருந்தேன். அவர்களது பல கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருந்தேன். ஆனால் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட ஈஸா (அலை) அவர்களது மரணத்தின் விஷயத்தில் மாறுபட்டேன். காரணம் நான் மஸீஹ் வானத்திலிருந்து இறங்கி வர வேண்டும் என்று எதிர்பார்ப்பவனாக இருந்தேன். மஸீஹின் இராணுவத்தில் இணைந்து பைத்துல் முகத்தஸை விடுவிப்பதற்கான உளப்பூர்வமான ஆசையில் இருந்தேன். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்பதைக் கேட்டதும் எனது உள்ளத்தின் கனவு தகர்ந்து போகத் தொடங்கியது. மஸீஹ் வானத்தில் இருந்து இறங்கமாட்டார் என்றால் எவ்வாறு நான் ஜிஹாது செய்யப் போகிறேன்? என்று நினைத்தேன்.

அவர் கூறுகிறார்: ஒரு நாள் எனது வீட்டில் சில அஹ்மதி சகோதரர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களுள் முஃதஸ் அல் கஸக் சாஹிபும் இருந்தார். அப்போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் பற்றிய பேச்சு ஆரம்பமானது. நான் அஹ்மதிகளிடம் கூறினேன். அல்லாஹ்வுக்காக கேட்டுக் கொள்கிறேன். என் வீட்டில் இருந்து கொண்டு ஈஸா நபி இறந்து விட்டதாகப் பேச வேண்டாம். உடனே கஸக் சாஹிப், நானும் உங்களிடம் ஒரு கோரிக்கை விடுக்கிறேன். இது பற்றி வழிகாட்டுமாறு நீங்களும் இறைவனிடம் துஆ கேட்க வேண்டும் என்று கூறினார்.

அவர் கூறுகிறார்: இது எனக்கு மிகவும் பிடித்து விட்டது. நான் அதே நாளிலிருந்து அல்லாஹ்வின் முன்பு ஸஜ்தாவில் அழுதழுது துஆ செய்து கொண்டிருந்தேன். இரவில் தூங்கும்போது கனவில் பார்த்தேன். நான் ஓர் உயரமான இடத்தை நோக்கிச் செல்கிறேன். வழியில் பூமியில் ஓர் அடையாளம் வருகிறது. அதில் அடியெடுத்து வைத்ததும் அந்த பூமி என்னை அடி ஆழத்திற்கு புதைப்பதாக உணர்கிறேன். இந்த கஷ்டமான நிலையில் என்னை ஒருவர் எனது தோளைப் பிடித்து தூக்கியவாறு, ஏ அப்ஸன்? இது அஹ்மது உடைய குனியத் (சுட்டுப்) பெயர். இந்த இடத்திற்கு ஒருபோதும் வராதீர். உறுதி கொள்ளுங்கள். ஈஸா (அலை) அவர்கள் இறந்து போய் விட்டார்கள். எழு. நீ உனது வழியில் செல் என்று கூறுகிறார். நான் விழித்த பிறகு எனது அஹ்மதி சகோதரரான முஃதஸ் அல் கஸக் சாஹிபிடம் செல்ல வேண்டும் என்று ஃபோன் செய்து கூறினேன். நாங்கள் இருவரும் முஃதஸ் சாஹிபின் வீட்டை அடைந்ததும், நுழையும்போதே சுவரில் தொங்கிய ஒரு ஃபோட்டோவைப் பார்த்து மலைத்துப் போய் விட்டேன். இது யாருடைய ஃபோட்டோ என்று கேட்டேன். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது இமாம் மஹ்தி (அலை) அவர்களுடைய ஃபோட்டோ என்று கூறினார்கள். இதனைக் கேட்டதும் நான் இப்போதே பைஅத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார். ஏனெனில் அறை சுவரின் மீது வைக்கப்பட்டிருந்த ஃபோட்டோவில் இருந்தவர் எனது கனவில் எனது தோளைப் பிடித்து புதை குழியிலிருந்து என்னைக் காப்பாற்றியவாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்று கூறிய அதே நபர் தான் என்று அவர் கூறினார்.

நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ் பல்வேறு வழிகளின் மூலமாக மக்களுக்கு உண்மையை புரியவதற்கான வழியை திறக்கிறான். சில வேளை கனவுகளின் மூலமாகவும், சில வேளை தப்லீகின் மூலமாகவும், சில வேளை அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான போதனை –களைப் பற்றி ஏதாவது ஜமாஅத் புத்தகம் கிடைத்து அதனை படிப்பதன் மூலமாகவும், சிலவேளை ஓர் அஹ்மதியின் நல்லொழுக்கத்தின் தாக்கத்தால் மக்கள் அஹ்மதிய்யத் என்ற உண்மையான இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இக்காலத்தில் பலர் M.T.A மூலமாக உண்மையான இஸ்லாம் பற்றி தெரிந்து கொண்டு அஹ்மதிய்யத்தில் நுழைகின்றனர்.

பெனின் உடைய முபல்லிக் எழுதுகிறார்: அவரது பகுதி Cheif இணை வைப்பவராக இருந்தார். அவருக்கு தப்லீக் செய்யப்பட்டது. அவர் அஹ்மதியாகி உண்மையான இஸ்லாத்தின்படி செயல்பட ஆரம்பித்தார். இணை வைப்பில் மூழ்கியிருந்த உள்ளம் ஒரே இறைவனின் முன் குனியக்கூடியதாகி விட்டது. அது மட்டுமல்லாமல் அவர் அந்த பகுதியின் முஸ்லிம்களையும் கூட உண்மையான இஸ்லாத்தின் பக்கம் அழைப்பவராகி விட்டார். இந்த வகையில் அப்பகுதியில் ஒரு மஸ்ஜித் திறப்பு விழா நடந்தது. அப்போது அவர் சொற்பொழிவாற்றினார். அதனை அவர் கூறியபடியே கூறுகிறேன்.

இணை வைப்பவராக இருந்து முஸ்லிம் ஆன அந்த Cheif கூறுகிறார்: அஹ்மதி அல்லாதவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஏன் எதிர்க்கின்றனர் என்று எனக்கு புரியவில்லை. இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தான் உலகில் இஸ்லாத்தின் தூதை உலகின் எல்லை வரை பரப்புகிறது. நான் ஓராண்டிற்கு முன்பு வரை இணை வைப்பவனாகவே இருந்தேன். இணை வைப்பவர்களின் அரசனாக இருந்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முபல்லிக் எனது சிந்தனையை மாற்றி விட்டார். இஸ்லாத்தின் சரியான முகத்தை எனக்கு காட்டினார். நான் இஸ்லாத்தில் நுழைந்து விட்டேன். அஹ்மதிய்யா ஜமாஅத்

கிறித்தவர்களையும் இணை வைப்பவர்களையும் இஸ்லாத்திற்கு கொண்டு வருகிறது என்றால் பிறகு உங்களுக்கு வருவதற்கு என்ன கஷ்டம்? இந்தப் பள்ளிவாயில் எல்லா மக்களுக்காகவும் திறந்துள்ளது. அல்லாஹ்வை வணங்குவதற்கு ஒரு கிறித்தவர் வந்தாலும் கூட அவர் தடுக்கப்பட மாட்டார். நீங்கள் எதிர்ப்பை விட்டு விட்டு உள்ளே வந்து பாருங்கள். இங்கு அன்பு, நேசம், அமைதி, சகோதரத்துவத்தின் படிப்பினையே கிடைக்கும். அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே உலகின் நலனை நாடுகிறது.

மேலும் அவர் கூறினார்: இங்கு பள்ளிவாயிலுடன் சேர்ந்து ஒரு வீடு கட்டி அதில் இருந்து கொண்டு, அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே உண்மையான இஸ்லாம் என்று இங்கு வருபவர்களிடம் கூற வேண்டும் என்று என் உள்ளம் விரும்புகிறது. ஒரு புறம் இஸ்லாத்தின் பெயரால் குழப்பம் ஏற்படுத்தக்கூடிய ஆலிம்கள் இருக்கிறார்கள். அகம்பாவத்தால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். தமது சொந்த அகந்தையின் காரணமாக முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம்களின் இரத்தத்தை சிந்த வைக்கிறார்கள். மறுபுறம் இணைவைக்கும் ஒருவரின் நன்மை அல்லாஹ்வுக்குப் பிடித்து விடுகிறது. அவன் அவர் மீது அருள் புரிகிறான். இஸ்லாமிய போதனையின்படி செயல்படுவதாக வாதிப்பவர்களுக்கு உண்மையான இஸ்லாமிய போதனையைக் கூறவும், குழப்பம், கிளர்ச்சிகளில் இருந்து தப்பிக்கவும் போதிப்பதற்காக அவரை நிற்க வைத்துள்ளான். இதுவே அல்லாஹ்வின் செயல் ஆகும். ஒரு மனிதன் பணிவுடன் நடந்து கொண்டால் இவ்வாறு அருள் புரிகிறான். ஆனால், அகம்பாவம் கொண்டால் அவர் இலட்சம் தொழுகையும் துஆவும் உள்ளவராகவும், தம்மை நன்மை செய்பவராகக் கருதினாலும் ஹாஜியாக இருந்தாலும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து நேர்வழி கிடைக்காது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வருபவர்கள் உண்மையான இஸ்லாத்தின் சுவையை ருசிக்கிறார்கள். பிறகு அவர்களது நிலைமைகளில் என்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன? அல்லாஹ் அவர்களுக்கு எவ்வாறு வழிகாட்டுகிறான்? தியாகங்களில் அவர்கள் எவ்வாறு முன்னேறுகிறார்கள்?

இது சம்பந்தமாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்ட –வாறு நமது ஒரு முபல்லிக் எழுதுகிறார்: கேமரூன் சுற்றுப் பயணத்தின்போது ஓர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். இவர் பேமோன் கோத்திரத்தைச் சார்ந்தவர். அதாவது அங்குள்ள மன்னர் U.K மாநாட்டில் கடந்த வருடம் கலந்து கொண்டார். (கடந்த வருடம் இந்த சம்பவத்தை இவர் எனக்கு எழுதினார். இந்த சம்பவம் இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்ததாகும்).

அவர் கூறுகிறார்: இந்த வருடம் கேமரூனுக்கு சுற்றுப் பயணம் சென்றேன். இவரிடம் மீண்டும் சந்திப்பு ஏற்பட்டது. மஸ்ஜிதிற்காக நான் ஒரு பிளாட் தர விரும்புகிறேன் என்று அவர் கூறினார். அவர் கூறுகிறார்: நானும் ஜமாஅத் தலைவரும் பிளாட்டை பார்ப்பதற்காகச் சென்றோம். அதில் ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது. கட்டுமானப் பணி நடந்து கொண்டிருந்தது. அதன் மேல் வீட்டை கட்ட அவர் எண்ணியிருந்தார். அவர் கூறினார்: எனது தந்தையார் இறந்து விட்டார். அவர் என் கனவில் வந்தார். 'இந்த இடத்தில் வீடு வேண்டாம். பள்ளிவாயிலைக் கட்டு' என்று கூறினார்.

அவர் கூறுகிறார்: இந்த வகையில் நான் கட்ட ஆரம்பித்திருந்த கட்டடத்தை ஜமாஅத்தின் பெயருக்கு மாற்ற வேண்டும் என்று முடிவு செய்தேன். அதன் மூலம் ஜமாஅத் அங்கு பள்ளிவாயிலை உருவாக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தேன் என்கிறார். அது கணிசமான பெரிய பிளாட் ஆகும். சுமார் ஆயிரம் சதுர மீட்டர் கொண்டது. அதனை ஜமாஅத் பெயருக்கு எழுதிக் கொடுத்து விட்டார். அதில் பள்ளிவாயில் கட்டப்படும் – இன்ஷா அல்லாஹ்.

பிறகு ஒரு சம்பவம் கூறுகிறேன். எவ்வாறு இஸ்லாத்தின் மீது வேதனை கொண்ட தூரப்பகுதியில் வாழக்கூடிய ஒரு மனிதரின் துஆவை அல்லாஹ் கேட்டான் என்பதை அது காட்டுகிறது. இஸ்லாத்தின் உண்மையான போதனையை நடைமுறைப்படுத்து –வதற்காக ஓர் அஹ்மதி முபல்லிகை அல்லாஹ் அவரிடம் அனுப்பினான்.

அதனை விளக்கியவாறு ஐவரிகோஸ்டின் ஒரு முஅல்லிம் எழுதுகிறார்: ஐவரிகோஸ்டின் அபன்கரோ மண்டலத்தின் ஓர் ஊரான யாடுகுரோவிலிருந்து ஸயீது சாஹிப் கூறுகிறார். அந்த ஊரில் இஸ்லாம் அவரது தந்தைவழிப் பாட்டனார் மூலமாக வந்திருந்தது. சிறிது சிறிதாக மக்கள் இஸ்லாத்தை விட்டு விலகி விட்டனர். எந்த அளவுக்கு எனில் இஸ்லாம் பெயரளவில் நின்று விட்டது. எவ்வாறு இன்று முஸ்லிம்களின் நிலை இருக்கிறதோ அதுபோன்றே அங்குள்ள நிலைமையும் இருந்தது. இந்த ஸயீது சாஹிப் கூறுகிறார். நான் பெரும்பாலும் துஆ செய்து வந்தேன். இஸ்லாத்தின் அசல் போதனையில்படி மக்கள் செயல்பட வேண்டும் என்று துஆ செய்து வந்தேன். 2016 –ன் அருளுக்குரிய ரமலான் மாதத்தின் ஆரம்பத்தில் இந்த துஆவை செய்தவாறு கண்களிலிருந்து கண்ணீர் வந்து விட்டது. வேதனையுடன் துஆ செய்தேன். அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முபல்லிக் எங்கள் ஊருக்கு வந்தார். ஜமாஅத்தை எங்களுக்கு அறிமுகம் செய்தார். அது எனது ஈமானுக்கு வலுவூட்டியது. தூரத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு கூட எவ்வாறு அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியின் தூதை எடுத்துக் கொண்டு வந்துள்ளார் என்பது எனது ஈமானை அதிகரிக்கக் காரணமாக அமைந்தது. முபல்லிக் சாஹிப் உடைய இந்த சுற்றுப் பயணத்தில் அவ்வூரின் 55 பேர் பைஅத் செய்தனர். இவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக நாங்கள் சரியான இஸ்லாமிய போதனையின்படி அமல் செய்பவராக இருக்கிறோம் என்று ஸயீது சாஹிப் கூறுகிறார்.

சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒருபுறம் முன்னேற்றமடைந்த நாடுகளின் மக்கள் மார்க்கத்தை மறந்து உலகியல் பொருள்களுக்காக நிம்மதி இழந்துள்ளனர். மறுபுறம் தொலைதூரப் பகுதியிலுள்ள கிராமத்தில் வசிக்கும் ஒருவர் ஆப்பிரிக்காவின் தொலைதூரப் பகுதியில், அப்பகுதிக்குச் செல்வதற்கு சரியான சாலைகள் கூட இல்லாத நிலையில் உலகின் சொகுசுகளிலிருந்து விலக்கப்பட்டு இருக்கும் அந்தப் பகுதியில் வசிக்கும் ஒருவருக்கு ஒரேயொரு துடிப்பு மட்டும் இருந்தது. இஸ்லாத்தின் போதனை இங்கு அழிந்து கொண்டிருக்கிறது. எவரையாவது அனுப்பு! அவர் மூலம் இஸ்லாத்தின் உண்மையான போதனையை இங்கு மீண்டும் நிலைநாட்டு! அதனை பற்றி சொல்லிக்கொடு! என்று துடிப்புடன் அவர் துஆ செய்தார். பிறகு இறை நியதியால் முஹம்மதிய மஸீஹின் ஓர் அடிமை அந்தப் பகுதிக்குச் சென்றடைகிறார். அவர்களுக்கு இஸ்லாமிய போதனையைப் பற்றி கூறுகிறார். ஏனெனில் இன்று உலகிற்கு உண்மையான இஸ்லாத்தை ஒருவர் கற்பிக்க முடியும் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களால் மட்டுமே அதனை கற்றுக் கொடுக்க முடியும். அவர்கள் மூலமே இஸ்லாத்தின் உண்மையைக் கண்டறிய முடியும்.

ஆகவே, நம்மில் ஒவ்வொருவரின் பணியாவது ஒரு வேதனையுடன் இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகில் பரப்பவும் ஒவ்வொருவரிடமும் கொண்டு சேர்க்கவும் துஆவும் செய்யுங்கள். முயற்சி செய்யுங்கள். ஏராளமான அமைப்புகள் உள்ளன. பிரிவுகள் உள்ளன. இஸ்லாத்தின் பெயரால் பணி செய்வதாக கூறுகின்றன. தப்லீக் ஜமாஅத்தும் உள்ளது. ஆனால் ஒவ்வொருவரும் தமது சுயநலனின் பின்னால் போகின்றனர். எதிர்ப்பில் ஒவ்வொருவரும் மற்றவர் மீது குஃபர் ஃபத்வாவை எப்போதும் வழங்கத் தயாராக உள்ளனர். இவர்கள் இஸ்லாத்துக்கு என்ன சேவையை செய்துவிடப் போகிறார்கள்? இஸ்லாத்தின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்கும் இந்தப் பணி இன்று முஹம்மதிய்ய மஸீஹின் அடிமைகளின் பணியாகும். நமது பணியை அல்லாஹ் சுயமே எளிதாக்குகிறான். சிலருக்கு கனவுகள் மூலமாக வழிகாட்டுகிறான். சிலருக்கு வேறு வழியின் மூலமாக வழிகாட்டுகிறான். ஆகவே, நாம் பைஅத்தின் உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்றால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உதவியாளர்களில் ஒருவராக ஆகி விட வேண்டும்.

நாம் பைஅத் செய்த பிறகு எவ்வாறு ஆக வேண்டும் என்பது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "சம்பிரதாயமான பைஅத் பயனளிப்பதில்லை. அத்தகைய பைஅத்தில் பங்குதாரராக இருப்பது சிக்கல் ஆகும்." அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் வைக்கப்பட்டுள்ள அருளுக்குரிய விஷயங்களுடன் உரிமையான முறையில் பங்கெடுப்பது சிரமமாகும். "எப்போது அவர் பைஅத்தில் பங்கெடுத்தவராக இருப்பார் எனில் அவர் தனது இருப்பை முற்றிலும் இழந்தவராகி முற்றிலும் அன்பும் கலப்பற்ற தூய்மையும் கொண்டவராக அவருடன் சேர்ந்து விட வேண்டும். நயவஞ்சகர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)


## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து
இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும்,
வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக்
கொண்டதும் இறையச்சமுடையோருக்கு
ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான
சொர்க்கத்தின்பாலும்
விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**
**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772
V.A. SAIT - 99430 30230

## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம்
அழைக்கவும் நல்லவற்றைப்
போதித்து தீமையைத் தடுக்கவும்
செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்)
உங்களிடையே இருந்து வர
வேண்டும். இவர்களே வெற்றி
பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

அவர்களுடன் உண்மையான தொடர்பு கொள்ளாத காரணத்தால் ஈமான் இழந்தவராகினர். அவர்களிடம் உண்மையான அன்பும் கலப்பற்ற தூய்மையும் உருவாகவில்லை. எனவே வெளிப்படையான லாயிலாஹ இல்லல்லாஹ் அவர்களுக்கு பயன் தரவில்லை. இந்த தொடர்புகளை வளர்ப்பது அவசியமான விஷயமாகும். அன்பு மற்றும் கலப்பற்ற தூய்மையின் தொடர்பை மேம்படுத்த வேண்டும். எந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு அம்மனிதர் வழிமுறைகளிலும் கொள்கையிலும் அவரையொத்த ஒரே சாயலில் வந்து விட வேண்டும்.'' அதாவது எவரை ஏற்றுக் கொண்டுள்ளோமோ அவரைப் போன்று ஆகி விட முயற்சி செய்ய வேண்டும். "வாழ்வுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. விரைவாக உண்மை மற்றும் வணக்க வழிபாடுகளின் பக்கம் குனிய வேண்டும். (நான் எவ்வாறு வாழ்வைக் கழிக்கிறேன்) என்று காலையிலிருந்து மாலை வரை கணக்கெடுக்க வேண்டும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 5; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.)

அல்லாஹ் புதிதாக வருபவர்களின் ஈமானையும் உறுதியையும் மேம்படுத்துவானாக! கொள்கை அளவிலும் செயல்ரீதியாகவும் அவர்கள் முன்னேறு –பவர்களாவார்களாக! ஈமானின் நெருப்புப் பொறியை அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் மூட்டியுள்ளான். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அதில் அவர்கள் முன்னேறிச் செல்லட்டும். ஷய்த்தான் ஒருபோதும் அவர்களை குழப்பாதிருப்பானாக! அல்லாஹ் அவர்களுக்கு எப்போதும் உறுதியான பாதத்தை வழங்குவானாக! பழைய பிறப்பு அஹ்மதிகளாகிய நமக்கும் கூட நமது ஈமானை அதிகரிக்கவும் எப்போதும் அதில் ஒளியை உருவாக்கவும் அல்லாஹ் வாய்ப்பு தருவானாக! அல்லாஹ் அவனுடன் உள்ள தொடர்பை அதிகரிக்கவும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

புதிதாக வருபவர்களுக்கு தருமாறுவதற்கு நாம் ஒருபோதும் காரணமாகாமல் இருப்போமாக! எப்போதும் உலகிற்கு சரியான வழியைக் காட்டுபவர்களாக இருப்போமாக! நாம் பழைய அஹ்மதிகள் என்பதில் மகிழ்ச்சி அடையக் கூடாது. மாறாக, நாம் பைஅத்தின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக இருப்போமாக! உலகியல் வசதிகள் நமது இலக்காக இருக்கக் கூடாது. மாறாக அல்லாஹ்வின் திருப்தியே இலக்காக இருக்க வேண்டும். நாம் விரைவாக உண்மையான இஸ்லாம் உலகில் பரவக் காண்போமாக! அதன் மூலம் நீங்கள் எதனை உலகிற்கு நஷ்டமிழைக்கக் கூடியதாக கருதுகிறீர்களோ அதுவே உண்மையில் உங்களுக்கும் உலகிற்கும் ஈடேற்றத்தின் வழியாகும் என்று நாம் உலகிற்கு கூற இயல வேண்டும்.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

எனவே கேட்பவர்களே! இந்த விஷயங்களை நினைவில் கொள்ளுங்கள். இந்த முன்னறிவிப்புகளை உங்களது பெட்டிகளில் பாதுகாத்து வையுங்கள். இது இறைவனின் வார்த்தையாகும். அது ஒருநாள் நிறைவேறும். நான் என்னிடம் எந்தவொரு நன்மையையும் காணவில்லை. நான் செய்ய வேண்டிய பணியைச் செய்யவில்லை. நான் என்னை ஒரு தகுதியற்ற தொழிலாளியாகவே கருதுகின்றேன். எனக்கு கிடைத்திருப்பது அனைத்தும் முழுக்க முழுக்க இறைவனின் அருளாகும். எனவே, வல்லமையுள்ள கருணைமிக்க அந்த இறைவனுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள் உரித்தாகுக! இந்த எல்லா விதமான திறமையற்ற தன்மைகள் இருந்தும் கூட இந்த ஒரு பிடி மண்ணை அவன் ஏற்றுக் கொண்டான்.

(தஜல்லியாத்தே இலாஹிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 407)

கஷ்ஃப் உலகில் எனக்கு அந்த அரசர்கள் காட்டப்பட்டனர். அவர்கள் குதிரைகளில் சவாரி செய்து கொண்டிருந்தனர். இவர்கள்தான் தமது கழுத்துகளில் உமக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கான சுமையை சுமப்பர். இறைவன் அவர்களுக்கு அருளை வழங்குவான் என்று என்னிடம் கூறப்பட்டது.

# 'நிக்காஹ்'-விற்கு 'வலி'-யின் அனுமதியைப் பெற வேண்டியது அவசியமானதாகும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 18 ஏப்ரல் 2016 -ல் நிகழ்த்திய குத்பா பேருரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருமணம் தொடர்பாக இந்த விஷயம் பெண்களுக்கு தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். வரன் பார்க்கும்போது பெண்ணின் விருப்பமும் அதில் இருக்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்கள் பெண்ணின் விருப்பத்தை நிலைநாட்டியவாறு பெண்ணின் விருப்பம் அதில் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். அவ்வாறிருந்தும் கூட இஸ்லாம் இந்த விஷயத்தையும் கண்டிப்பாக பேணி நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அதாவது வலி (பெண்ணின் தந்தை அல்லது அவளது காப்பாளர்) -யின் அனுமதியின்றி நிக்காஹ் செய்வது அனுமதிக்கப்பட்டதல்ல.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். உண்மையிலேயே அவர்கள் அவன் தரப்பிலிருந்தே அனுப்பப்பட்டுள்ளார்கள் என்றால் பிறகு நமது ஷரீஅத் (இஸ்லாமிய மார்க்கச் சட்டம்) இதையே கூறுகின்றது. அதாவது எந்த விஷயங்களுக்கு சுயமே ஷரீஅத் விதிவிலக்கு அளித்திருக்கின்றதோ அவற்றை தவிர வேறு எந்நிலையிலும் வலியின் அனுமதியில்லாமல் நடைபெறும் எந்தவொரு திருமணமும் ஆகுமானதல்ல. அது முறையற்ற செயலாகும். அத்தகைய மக்களுக்கு புரிய வைப்பது நமது கடமையாகும். அவர்கள் அதை புரியாமல் இருந்தால் அவர்களுடனுள்ள உறவை துண்டித்துக் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற சம்பவங்கள் சில நேரங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் நடந்திருக்கின்றன. ஒரு இளம்பெண் ஒரு நபரை திருமணம் செய்து கொள்ள விரும்பினார். ஆனால், அப்பெண்ணின் தந்தை அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்விருவரும் (இளம்பெண்ணும் அந்த நபரும்) நங்கல் (காதியானுக்கு அருகிலுள்ள ஓரிடத்திற்குச்) சென்றனர். அங்கு சென்று ஒரு முல்லாவின் மூலமாக திருமணம் செய்து கொண்டனர். மேலும் அவர்களது திருமணம் நடைபெற்று விட்டதாக கூற ஆரம்பித்தனர். பிறகு அவர்கள் காதியான் வந்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்தபோது அன்னார் அவ்விருவரையும் காதியானிலிருந்து வெளியேற்றி விட்டார்கள். பெண்ணின் விருப்பத்தை மட்டும் பார்த்து விட்டு வலியின் அனுமதியில்லாமல் திருமணம் செய்வது ஷரீஅத்திற்கு மாற்றமான செயலாகும் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். அங்கும் கூட பெண்ணிற்கு விருப்பம் இருந்தது. மேலும் இந்த ஆணுடன் நான் திருமணம் செய்து கொள்வேன் என்று அவர் கூறினார். ஆனால், வலியின் அனுமதியில்லாமல் அவர்கள் திருமணத்தை நடத்தியதால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களை காதியானிலிருந்து வெளியேற்றினார்கள்.

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலத்திலும் இதுபோன்ற ஒரு திருமணம் அன்னாருக்கு முன்னால் நடந்தபோது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:) அதைப்போன்றே இந்த நிக்காஹ்வும் கூட அனுமதிக்கப்பட்டதல்ல. இதே விஷயத்தைத்தான் நான் அந்தப் பெண்ணின் தாயாரிடமும் கூறினேன். (ஒரு பெண் அங்கு வந்து பெண்ணிற்கு விருப்பம் இருந்ததால் என்னுடைய மகன் அவளை திருமணம் செய்து கொண்டான் என்றால் அதனால் என்ன தண்டனை வந்துவிடப் போகிறது? என்று கேட்டாள்.)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "நான் அப்போது அந்தப் பெண்ணிடம், பாருங்கள். உங்களது மகனுக்கு வரன் கிடைத்திருக்கின்றது என்பதற்காக பெண்ணிற்கு திருமணத்தில் விருப்பம் இருக்கும்போது ஒரு வலியின் விருப்பமும் இதில் இருக்க வேண்டிய தேவை என்ன வந்து விட்டது? என்று நீங்கள் கேட்கின்றீர்கள். ஆனால், உங்களுக்கும் பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களுக்கு இப்போது திருமணம் நடைபெற்றிருந் –தாலும் கூட அவர்களுக்கு கூட பெண் பிள்ளைகள் இருக்கும். அந்தப் பெண் பிள்ளைகளில் யாராவது ஒருவர் இவ்வாறு வெளியேறி ஓர் அந்நிய ஆணோடு சென்று விடுவதை நீங்கள் விரும்புவீர்களா? என்று நான் அவரிடம் கேட்டேன்.'' (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 18 பக்கம் 175-176)

எனவே, முதலில் கூறப்பட்டது போன்றே தாய் தந்தையரும் எவ்வித காரணமுமின்றி இவ்விஷயத்தில் இந்த அளவு கடுமையாக நடந்து கொள்ளக் கூடாது. அதாவது ஆகுமான எந்தவொரு காரணமும் இல்லாமல் பொய்யான தன்மான உணர்வின் பெயரில் சம்பந்தம் செய்யாமல் இருக்கக் கூடாது. அவ்வாறே இதற்காக கொலை வரை செல்கின்ற அநீதியான செயலைச் செய்பவர்களாகவும் அவர்கள் ஆகி விடக் கூடாது. பெண் பிள்ளைகளுக்கும் சுயமே அவர்கள் வீட்டை விட்டு வெளியேறி நீதிமன்றங்களில் அல்லது ஒரு மவ்லவியிடம் சென்று திருமணம் செய்து கொள்வதற்கு அல்லது தனது நிக்காஹ்வை நடத்திக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை. தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமான சில நிலைமைகள் இருந்தால் பெண் பிள்ளைகள் கூட காலத்தின் கலீஃபாவிற்கு அதைப் பற்றி எழுதலாம். பிறகு நிலைமைகளுக்கேற்ப என்ன நல்ல முடிவு எடுக்க வேண்டியது இருந்தாலும் அந்த முடிவை காலத்தின் கலீஃபா எடுப்பார். எனவே, பெண்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குகின்ற கொள்கையை கண் முன் வைத்திருந்தால் அவ்வாறே இளைஞர்களும் இதனை கண் முன் நிறுத்தி செயல்பட்டால் பிறகு இறைவனும் அருள் செய்வான்.

(நஸாரத் இஸ்லாஹோ இர்ஷாது, காதியான்)

## பெற்றோர்கள் அவர்களது சந்ததிகள் மார்க்கத்தின் தொண்டராக ஆக வேண்டும் என்பதற்காக கவலைப்பட வேண்டும்.

**சிறுவர்களின் தர்பிய்யத்திற்காக அவர்களுடன் நட்பின் சூழலை உருவாக்குவது அவசியமானதாகும். அவர்கள் ஏதாவது கேள்வி கேட்டால் அவர்களுக்கு பதில் கூறி அவர்களை திருப்திப்படுத்த வேண்டும். அதன் மூலம் பெற்றோர் அவர்கள் மீது அனுதாப உணர்வுள்ளவர்களாகவும் அவர்களது நண்பர்களாகவும் இருக்கின்றனர் என்ற உணர்வு அவர்களுக்கு இருக்க வேண்டும். அவர்கள் உங்களை தங்களது இரகசியங்களைப் பாதுகாப்பவர்களாகக் கருத வேண்டும். தங்களது விவகாரங்களில் அவர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும். அவர்கள் உங்களிடமிருந்து தங்களது தீமைகளை மறைப்பவர்களாக இருக்கக் கூடாது. உண்மையை கடைபிடிக்கும் நல்லொழுக்கத்தை அவர்கள் பின்பற்றும்படி அவர்களுக்கு நீங்கள் போதனை செய்யுங்கள்.**

**நினைவில் கொள்ளுங்கள். அஹ்மதி தாய்மார்களாகிய மற்றும் அஹ்மதி சகோதரிகளாகிய நீங்கள்தான் எதிர்காலத்தின் சிறந்த சமுதாயத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். உங்களது ஐவேளை தொழுகைகளை விடாமல் நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டை செய்யுங்கள். இஸ்லாமிய போதனைகளைக் கடைபிடியுங்கள். உதாரணமாக பர்தாவைப் பேண வேண்டும். மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குங்கள். காலத்தின் கலீஃபா கூறும் விஷயங்களைக் கவனமாகக் கேளுங்கள். அதற்கேற்ப செயல்படுங்கள். ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்பட்டு நடங்கள். எல்லா மட்டத்திலுள்ள பொறுப்பாளர் –களையும் கண்ணியப்படுத்துங்கள். இந்த எல்லா விஷயங்களையும் உங்களது சந்ததிகளுக்கும் கற்றுக் கொடுங்கள்.**

## 2016 -ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் வருடாந்திர இஜ்திமாவிற்காக ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கியுள்ள தூதுச்செய்தி

இலண்டன்
24-09-2016

அன்பார்ந்த லஜ்னா இமாயில்லாஹ் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்
வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு

உங்களுக்கு வருடாந்திர இஜ்திமா நடத்து -வதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அல்லாஹ் இந்த இஜ்திமா நடத்துவதை எல்லா வகையிலும் உங்களுக்கு அருளுக்குரியதாக ஆக்குவானாக! ஆமீன்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் தூதுச்செய்தி அனுப்ப வேண்டும் என்று என்னிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நான் உங்களுக்கு சில தர்பிய்யத் விஷயங்களின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். இந்த விஷயம் நாள்தோறும் நமது பார்வையில் வருகின்றது. அதாவது மனிதன் சிறிய சிறிய தீமைகளில் ஈடுபடுகின்றான். உதாரணமாக, அவன் தனது அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரை சந்திக்கும்போது எவரையாவது அவர்கள் எள்ளி நகையாடி பரிகாசம் செய்கின்றனர். தங்களது பிள்ளைகளை அவர்கள் அளவுக்கு அதிகமாக நேசிக்கின்றனர். மற்றவர்களது பிள்ளைகளைப் பின்னால் தள்ளி விடுகின்றனர். சின்னச் சின்ன விஷயங்களுக்காக பொய் பேசுகின்றனர். குழந்தைகளையும் பொய் பேசுவதில் ஈடுபடுத்தி விடுகின்றனர். உதாரணமாக அவர்கள் எவரையாவது சந்திக்க விரும்பவில்லை என்றால் குழந்தைகள் மூலமாக வீட்டு வாசலில் வைத்தே வீட்டிற்கு வருகின்றவர்களிடம் தாங்கள் வீட்டில் இல்லை என்று கூற வைக்கின்றனர். இவ்வாறே பொறுப்பாளர்களின் ஏதாவது ஒரு விஷயம் பிடிக்காமல் போய் விட்டால் தமது உள்ளங்களில் கீழ்ப்படியாமல் இருப்பதற்கான சிந்தனையை உருவாக்கிக் கொள்வது, பொறுப்பாளர்களுடன் பிடிவாதம் காட்டுவது, அவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபடுவது, அவர்கள் கூறும் விஷயத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது ஆகிய இந்த தீமைகளை பெரியவர்கள் கை விடாமல் இருந்தால் பிறகு அவை அவர்களின் சந்ததிகளிடம் வந்து விடுகின்றன. அவர்களின் சீர்திருத்தத்திலும் சீர்குலைவு ஏற்பட்டு விடுகின்றது. பெரியவர்களைப் பார்த்து அவர்களின் சந்ததிகளிடம் ஜமாஅத் அமைப்பிற்குக் கட்டுப்படாமல் இருக்கின்ற நிலை உருவாகின்றது. பொறுப்பாளர்கள் மீதுள்ள கண்ணியம் உள்ளங்களிலிருந்து அகன்று விடுகின்றது. அத்தகைய பெற்றோர்களுக்கு இதைப் பற்றி புரிய வைக்கும்போது அவர்கள் காலம் மாறி விட்டது. குழந்தைகள் பெரியவர்களின் பேச்சைக் கேட்பதில்லை என்று கூறுகின்றனர். ஆனால், இவை எல்லாமே குழந்தைகளுக்கு சரியான தருணத்தில் தர்பிய்யத் வழங்காததன் காரணமாகவே ஏற்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறு வயதிலிருந்தே குழந்தைகளின் தர்பிய்யத்தைக் கருத்தில் கொள்ளுமாறு போதனை வழங்கியிருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது குழந்தைகள் ஏழு வயதை அடையும் போது அவர்கள் தொழ வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுங்கள். ஆனால் அவர்கள் பத்து வயதை அடையும்போது அவர்கள் தொழாமல் இருந்தால் அவர்களிடம் சற்று கடுமை காட்ட வேண்டும். இந்த வயதில் அவர்களை படுக்கையில் தனித்தனியாக படுக்க வையுங்கள்.

(திர்மிதி அப்வாபுல் பிர்ரி வஸ்ஸிலா)

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மனிதன் மரணமடையும்போது மூன்று விஷயங்களைத் தவிர அவனது மற்ற அனைத்து செயல்களும் அவனை விட்டு துண்டிக்கப்பட்டு விடுகின்றன. (அவனுடன் இருக்கும் மூன்று விஷயங்கள் இவை -யாகும்:) சதகா ஜாரியா - அதாவது தொடர்ந்து நீடித்திருக்கும் வகையில் அவன் வழங்கிய சதகா அல்லது பயன் பெறும் வகையில் உள்ள கல்வி அல்லது அவருக்காக துஆ செய்யும் அவரது நல்ல சந்ததிகள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் வஸிய்யத்)

எனவே, இஸ்லாத்தில் சந்ததிகளுக்கு நல்ல தர்பிய்யத் வழங்குவதற்கு குறிப்பான முக்கியத்துவம் இருக்கின்றது. நமது ஜமாஅத் முழு உலகிற்கும் ஆசிரியராக ஆக்கப்பட்டுள்ளது. அந்த ஜமாஅத்தில் உள்ள குழந்தைகள் மற்றவர்களை விட மிகவும் நல்லவர்களாகவும் தனித்தன்மை கொண்டவர் -களாகவும் தென்பட வேண்டும். அவர்களது செயலும் நடைமுறையும் நாகரீகமிக்கதாக இருக்க வேண்டும். அவர்கள் பேசுகின்ற முறையும் அவர்களது வாழ்க்கை முறையும் தூயதாகவும் மற்றவர்களுக்கு உதாரணமாகவும் திகழ வேண்டும். அவர்கள் மீது ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அன்னாரது கலீஃபாக்களின் போதனைகள் மற்றும் தர்பிய்யத்தின் தாக்கம் பெரிதாகத் தென்பட வேண்டும். குழந்தைகளின் தர்பிய்யத்திற்காக அவர்களுடன் நட்பின் சூழலை உருவாக்குவதும் அவசியமானதாகும். அவர்கள் ஏதாவது கேள்வி கேட்டால் அவர்களுக்கு பதில் கூறி அவர்களை திருப்திப்படுத்த வேண்டும். அதன் மூலமாக பெற்றோர்கள் அவர்கள் மீது அனுதாபம் கொண்டவர்களாகவும் அவர்களது நண்பர்களாக -வும் இருக்கின்றனர் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட வேண்டும். அவர்கள் உங்களை தங்களது இரகசியங்களைப் பாதுகாப்பவர்களாகக் கருத வேண்டும். தங்களது விவகாரங்களில் அவர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும். தீமைகளை உங்களிடமிருந்து மறைப்பவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது. அவர்கள் உண்மையைப் பேணுகின்ற நல்லொழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும் என்று அவர்களுக்கு போதனை செய்யுங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மனிதனின் மனநிலையையும் இயல்பையும் புரிந்தவர்களாக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருமுறை ஒரு நபரிடம் பொய்யிலிருந்து விலகியிருக்குமாறு போதனை செய்தார்கள். அவர்களது போதனைக் -கேற்ப உண்மையை கடைபிடித்ததன் அருளினால் அவரது எல்லா தீமைகளும் அவரை விட்டு விலகி விட்டன. பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளைகள் மார்க்கத்தின் தொண்டர்களாக இருக்க வேண்டும் என்ற கவலை இருக்க வேண்டும். அவர்கள் தமது பிள்ளைகளின் கொள்கைகளை சீர்திருத்துவது மற்றும் அவர்களது ஒழுக்கத்தை சிறப்பாக ஆக்குவதன் பக்கம் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: மக்கள், சந்ததிகள் பிறக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், அவர்கள் மார்க்கத்தின் தொண்டர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அவ்வாறு விரும்புவதில்லை. மாறாக, உலகில் அவர்களுக்கு ஒரு வாரிசு இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அவ்வாறு விரும்புகின்றனர். சந்ததிகள் அவர்களுக்கு பிறக்கும்போது அவர்களின் தர்பிய்யத் பற்றி அவர்கள் கவலை கொள்வதில்லை. அவர்களின் கொள்கைகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்து -வதில்லை. அவர்களது ஒழுக்க நிலையை சரி செய்வதும் இல்லை. இதனை நினைவில் கொள்ளுங்கள். எவர் நெருக்கமான தொடர்புகளை புரிந்து கொள்வதில்லையோ அவரது ஈமான் சரியானதாக இருக்க முடியாது. அல்லாஹ் சந்ததி -களுக்காக ஆசைப்படுவதை திருக்குர்ஆனில் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளான்:

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا
قُرَّةَ اَعْيُنٍ وَّ اجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا ۝

அதாவது, இறைவன் நமக்கு நமது மனைவியரிலிருந்தும் பிள்ளைகளிலிருந்தும் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்க வேண்டும்.

அவர்கள் குழப்பமும் தீமையும் உள்ள வாழ்வைக் கழிக்காமல் இருந்தால்தான் இந்த நிலையை அவர்கள் அடைய முடியும்.

இன்னும் சொல்வதென்றால், ரஹ்மானின் நல்லடியார்களின் வாழ்வைப் போன்ற வாழ்க்கையை கழிப்பவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இறைவனுக்கு எல்லாவற்றின் மீதும் முன்னுரிமை வழங்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். (மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 562-563)

எனவே, நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் அஹ்மதி தாய்மார்களாகவும் சகோதரிகளாகவும் இருக்கின்றீர்கள். நீங்கள்தான் எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். உங்களது ஐவேளை தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டை செய்யுங்கள். காலத்தின் கலீ.்.பா கூறும் விஷயங்களைக் கவனமாகக் கேளுங்கள். அதற்கேற்ப செயல்படுங்கள். ஜமாஅத்தின் அமைப்புக்கு கட்டுப்பட்டு நடப்பதுடன் எல்லா மட்டத்திலுள்ள பொறுப்பாளர்களுக்கும் மதிப்பளியுங்கள். மேலும், இந்த எல்லா நல்ல விஷயங்களையும் உங்களது சந்ததிகளுக்கும் கற்றுக் கொடுங்கள். இதன் மூலமாக உங்களது சொந்த வாழ்க்கையும் அழகானதாக ஆகி விடும். ஜமாஅத்தின் அமைப்பும் முன்னேற்றமடையும் - இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் உங்களுக்கு எனது இந்த போதனைகளுக்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ்

## நீங்கள் கிலா.்.பத்துடன் தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று நான் உங்களுக்கு போதனை செய்ய விரும்புகின்றேன்.

**எவர்கள் கட்டுப்பட்டு நடப்பதன் மிக உயரிய தரத்தை நிலைநாட்டுகின்றனரோ அவர்களுக்காகவே காலத்தின் கலீ.்.பாவின் துஆக்கள் அதிகமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. காலத்தின் கலீ.்.பா கூறும் விஷயங்களைக் கேட்டு உடனடியாக அதற்கேற்ப செயல்பட ஆரம்பித்து விடுங்கள் என்றே நான் உங்களுக்கும் கூட போதனை செய்கின்றேன்.**

### 2016 -ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் வருடாந்திர இஜ்திமாவின்போது ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கியுள்ள தூதுச்செய்தி

அன்பார்ந்த அன்ஸார் சகோதரர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்
வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு

இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்விற்கு இந்த வருடமும் தனது வருடாந்திர இஜ்திமாவை நடத்துவதற்கான நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படக் காரணமாக இருக்கின்றது. இந்த இஜ்திமா நடைபெறுவதை அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக! ஆமீன்.

என்னிடம் இந்த சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. நான் உங்களுக்கு நீங்கள் கிலா.்.பத்துடன் தொடர்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று போதனை செய்ய விரும்புகின்றேன். அல்லாஹ் திருக்குர்ஆனின் சூரா அந்நூரின் 56-வது வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۖ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْـًٔا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿٥٦﴾

அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீ.்.பாவாக ஆக்கியதுபோன்று இப்பூமியில் கலீ.்.பாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை கண்டிப்பாக அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவர்களது அச்சத்தின் நிலைமைக்குப் பிறகு கண்டிப்பாக அவர்களுக்கு அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் உறுதியான வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதற்குப் பிறகும் கூட நன்றிகேடு காட்டுபவர்களாகிய இம்மக்களே கட்டுப்படாதவர்களாவார்கள். (24:56)

இந்தக் காலத்தில் அல்லாஹ் இந்த வாக்குறுதியை ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வ.்.பாத்திற்குப் பிறகு அவர்களை பின்பற்றுபவர்களுக்காக நிறைவேற்றியுள்ளான். சுயமே ஹுஸுர் அலைஹிஸ் ஸலாம் அவர்களும் கூட தனது அன்பான ஜமாஅத்திற்கு கிலா.்.பத்தின் நிரந்தரமான அமைப்பு பற்றிய நற்செய்தியை வழங்கினார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: “அன்பர்களே! தொன்மையிலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுவேயாகும். எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இறைவன் இரண்டு வல்லமைகளைக் காட்டுகின்றான். எனவே இப்போதும் இறைவன் தனது தொன்மையான நடைமுறையைக் கை விட்டு விடுவது சாத்தியமற்றதாகும். எனவே உங்களிடம் நான் எடுத்துக் கூறியுள்ள இந்த விஷயத்தால் நீங்கள் துயரம் அடைய வேண்டாம். உங்களது உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனென்றால், இரண்டாவது வல்லமையையும் காண்பது உங்களுக்கு அவசியமானதாகும். அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனென்றால் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை நாள் வரை துண்டிக்கப்படாது. (அல் வஸிய்யத்)

எனவே, இறைவனின் நற்செய்திகளின் விளைவாக அஹ்மதிய்யா கிலா.்.பத் நிலைநாட்டப்பட்டது. அதன் ஐந்தாவது அருளுக்குரிய காலக்கட்டம் இப்போது இருந்து வருகிறது. அதனோடு தொடர்புள்ள நீங்கள் நற்பேறு பெற்றவர்களாவீர்கள். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இப்போது கிலா.்.பத்தின் அருளுக்குரிய அமைப்புடன் ஒன்றியிருப்பதன் மூலமே உங்களின் மார்க்க மற்றும் உலக வெற்றி, முன்னேற்றம் ஆகியவற்றிற்கான வழிவகைகள் ஏற்படும். அதன் மூலமே நீங்கள் ஒற்றுமையாக இருப்பீர்கள். பரஸ்பரம் உங்களில் ஒருவருக்கு மற்றவர் மீதுள்ள அன்பு வளர்ச்சியடையும். நீங்கள் மார்க்கத்திற்கு தொண்டு செய்யும் நல்வாய்ப்பைப் பெறுவீர்கள். இஸ்லாத்தின் தூதுச் செய்தியை முழு உலகிலும் பரப்புவதற்காக காலத்தின் கலீ.்.பாவின் தலைமையிலும் அவர்களது கண்காணிப்பின்கீழும் நடைபெற்று வருகின்ற அந்த மார்க்கப் பணிகளில் உங்களால் பங்கு பெற முடியும். கிலா.்.பத் உண்மையில் இறைவனிடம் இருந்து வழங்கப்பட்ட ஒரு மகத்தான அருட்கொடை ஆகும். கலீ.்.பாவை இறைவன் ஏற்படுத்துகின்றான். இரண்டு தரப்பிலிருந்தும் அன்பை இறைவனே உள்ளங்களில் உருவாக்குகின்றான். அந்நியர் ஒருவர் இதனை பார்க்க விரும்பினால் அவருக்கு இந்த ஆதாரமே போதுமானதாகும். அதாவது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இங்கு இலண்டனில் எனது குத்பா பேருரை நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது அங்கு முழு உலகிலுள்ள அஹ்மதிகளும் முழுமையான ஏற்பாட்டுடன் தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்திருக்கின்றனர். முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (MTA) மூலமாக நேரடியாக அதைக் கேட்கின்றனர். பிறகு வீடுகளிலும் பள்ளிவாயில்களிலும் குத்பாவிலுள்ள விஷயங்கள் பேசப்படுகின்றன. இவ்வாறு அவர்கள் தங்களது மார்க்க மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கான வழிவகைகளைச் செய்து கொள்கின்றனர். இந்த ஒரு ஒற்றுமையைத்தான் இஸ்லாம் தன்னைப் பின்பற்றுபவர்களிடம் உருவாக்க விரும்புகின்றது. மேலும் இந்த நோக்கம் அஹ்மதிய்யா கிலா.்.பத்தின் வடிவில் சிறப்பாக நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. எனவே, கிலா.்.பத் சந்தேகமின்றி இறைவனிடம் இருந்து கிடைத்துள்ள ஓர் அருட்கொடையாக இருக்க வேண்டும். காலத்தின் கலீ.்.பா கூறுகின்ற விஷயங்களுக்கு சமி.்.னா வஅத.்.னா (கேட்டோம்; கட்டுப்பட்டோம்) என்ற உணர்வுடன் அதற்கேற்ப செயல்படும்போதுதான் அந்த அருளுக்கு நன்றி செலுத்துபவர்களாக நாம் ஆவோம். எவர்கள் கட்டுப்பட்டு நடப்பதன் மிக உயரிய தரத்தை நிலைநாட்டுகின்றனரோ அவர்களுக்காகவே காலத்தின் கலீ.்.பாவின் துஆக்கள் அதிகமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. காலத்தின் கலீ.்.பா கூறும் விஷயங்களைக் கேட்டு உடனடியாக அதற்கேற்ப செயல்பட ஆரம்பித்து விடுங்கள் என்றே நான் உங்களுக்கும் கூட போதனை செய்கின்றேன். காலத்தின் கலீ.்.பா உங்களுக்கு தொழுகைகளைப் பேணுவதில் உள்ள சோம்பலை அகற்றுவதன் பக்கம் உங்களுக்கு கவனமூட்டினால் பிறகு பள்ளிவாயில்கள் (தொழுகையாளிகளால்) நிரம்பி விட வேண்டும். பிறகு நீங்கள் எந்த அளவு தொழுகைகளில் நிலைபெற்று விட வேண்டும் என்றால் பிறகு இந்தத் தொடர் ஒருபோதும் துண்டிக்கப்பட்டு விடக்கூடாது. காலத்தின் கலீ.்.பா தரப்பிலிருந்து எந்தவொரு பொருளாதாரத் திட்டம் கூறப்பட்டாலும் உங்களது தகுதிக்கேற்ப அதில் நீங்கள் பங்கு பெற வேண்டும். தப்லீகின் பணிகளில் ஞானத்துடன் செயல்பட்டவாறு பங்கு பெற வேண்டும். ஏதாவது விஷயத்தை தெரிந்து கொள்வதில் சிரமம் இருந்தால் உங்களது முரப்பி, முஅல்லிம் அல்லது உங்களுக்கு அருகிலுள்ள ஜமாஅத்தைச் சார்ந்த ஞானமுள்ள சகோதரர்களிடம் அதுபற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களது சொந்த அறிவையும் வளர்த்துக் கொள்ளுங்கள். இவ்வாறு உங்களது வீட்டின் சுற்றுச் சூழலையும் கூட ஈடிணையற்ற முன்மாதிரியைக் காட்டக் கூடியதாக ஆக்கி விடுங்கள். மக்களுடன் உள்ள விவகாரங்களில் சிறந்த முன்மாதிரியைக் காட்டுங்கள். உங்களுக்கு அருகிலுள்ள சுற்றுச்சூழலில் சிறந்த ஒழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுங்கள். உங்கள் மூலமாக இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் மகத்தான வடிவத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டுங்கள். இந்த விஷயங்களுக்காகத்தான் அஹ்மதிய்யத்தின் அடித்தளம் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த விஷயங்கள் தொடர்பாகத்தான் அஹ்மதிய்யத்தின் கலீ.்.பாக்கள் அவ்வப்போது உங்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றனர். எனவே, எந்த மக்கள் இந்த அருளிலிருந்து விலகி

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 16 March 2017 Issue No. 11

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# நீங்கள் மார்க்கத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்று நான் உங்களுக்கு போதனை செய்ய விரும்புகின்றேன்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்கள் தமது முழு வாழ்நாளையும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுகின்ற பணிகளில் எப்போதும் ஈடுபடுபவர்களாக இருந்த நிலையில் கழித்து வந்தார்கள். அவர்கள் மிகவும் அதிகமாக உழைப்பவர்களாகவும் ஒருபோதும் சோர்வடையாதவர்களாகவும் இருந்தார்கள்.**

**நீங்களும் கூட ஹுஸூர் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை முறையைப் பின்பற்றி நடக்க வேண்டும். உங்களது சக்திக்கேற்ப மார்க்கப் பணிகளில் பங்கு பெற வேண்டும். எவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பு கிடைக்க –வில்லையோ அவர்கள் இதற்காக முன்னே வாருங்கள். ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக உங்களை நீங்களே அர்ப்பணியுங்கள். இவ்வாறு உங்களது மார்க்க மற்றும் உலக முன்னேற்றத்திற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.**

## 2016 -ல் நடைபெற்ற இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் வருடாந்திர இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கியுள்ள தூதுச்செய்தி

இலண்டன்
24-09-2016

அன்பார்ந்த இந்திய குத்தாம் மற்றும் அத்ஃபால்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு

இந்தக் காலக்கட்டம் பௌதீகத்தை வணங்கும் காலக்கட்டமாக இருக்கின்றது. எல்லா பக்கமும் பணம் சம்பாதிப்பதற்கும் உலக விருப்பங்களை நிறைவேற்றுவதற்கும் உள்ள ஓட்டம் இருந்து வருகின்றது. சமுதாய தீமைகளும் ஒழுக்க பலவீனங்களும் எல்லா பக்கமும் பொதுவானதாக இருக்கின்றது. மக்களது ஈடுபாடுகளும் கவனங்களும் மாறி விட்டன. அவர்கள் முன்னுரிமை வழங்குகின்ற விஷயங்களும் வேறானவையாகும். எல்லா பக்கமும் எத்தகைய ஒரு சுற்றுச்சூழல் உருவாகி வருகின்றது என்றால் அது மார்க்கத்தை விட்டும் நம்மை தொலைவில் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், நம்பிக்கை கொண்ட ஒருவர் இந்த விஷயங்களினால் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்து விட முடியுமா என்ன? ஒருபோதும் இருக்க முடியாது. நீங்கள் எப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றீர்கள் என்றால் உங்களுக்கு அல்லாஹ் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது முழு வாழ்நாளையும் மார்க்கத்திற்கு தொண்டாற்றும் பணிகளில் எப்போதும் ஈடுபட்டவர்களாக இருந்த நிலையில் கழித்து வந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் நூல்களை எழுதினார்கள். மக்களுடன் விவாதங் -களில் ஈடுபட்டார்கள். பல்வேறு இடங்களுக்கு பயணம் மேற்கொண்டார்கள். எல்லா நேரங்களிலும் மக்கள் காதியானுக்கு வந்தனர். அவர்கள் அம்மக்களது விருப்பத்திற்கேற்ப தன்னை சந்திப்பதற்கான சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்கினார்கள். அவர்கள் மிகவும் அதிகமாக உழைப்பவர் -களாகவும் ஒருபோதும் சோர்வடையாதவர்களாகவும் இருந்தார்கள். எனவே இந்த அருளுக்குரிய பெருந்தகையை ஏற்றுக் கொண்டிருப்பதும் அவரிடம் பைஅத் செய்திருப்பதும் உங்களது நற்பாக்கியமாகும்.

நினைவில் கொள்ளுங்கள். நீங்களும் கூட ஹுஸூர் (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை முறையைப் பின்பற்றி நடக்க வேண்டும். உங்களது சக்திக்கேற்ப மார்க்கப் பணிகளில் பங்கு பெற வேண்டும். உலகை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவேன் என்று உறுதிமொழி கூறுவது மட்டும் போதுமானதல்ல. அதற்கேற்ப செயல்படுவதும் அவசியமானதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: முடிந்தால் மார்க்கத்திற்கு தொண்டு செய்ய வேண்டும். மனிதனின் நேரம், ஆற்றல், பொருள், உயிர் ஆகியவை இறைவனின் மார்க்கத்திற்கு தொண்டு செய்வதில் செலவாவதை விட அதிகமான நற்பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்? நமக்கு நோயினால் ஏற்படக் கூடிய பாதிப்பு தொடர்பான அபாயம் மட்டுமே இருக்கின்றது. அது அல்லாமல் முழு இரவும் இதே பணியைச் செய்து கொண்டே செல்ல வேண்டும் என்றே உள்ளம் விரும்புகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 112)

பிறகு கூறுகின்றார்கள்: பயணம் செய்தாலும் மார்க்க நோக்கத்திற்காக பயணம் செல்லும் எண்ணத்துடன் செல்ல வேண்டும். உலகை பெறும் எண்ணத்துடன் எவர் பயணம் மேற்கொண்டாலும் அது பாவமாகி விடும். ஒவ்வொரு விஷயத்திலும் கொஞ்சமாவது மனிதனின் கவனம் மார்க்கத்தின் பக்கம் திரும்புவதாக இருந்தால்தான் அவன் சரியானவனாக ஆக முடியும். ஒவ்வொரு சபையிலும் அதில் மார்க்கத்தின் சிறிய அம்சமாவது கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செல்ல வேண்டும். நபிமொழியில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது: ஒரு நபர் வீட்டைக் கட்டினார். இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து தாங்கள் அங்கு செல்லுங்கள். உங்களது பாதங்கள் படுவதன் மூலம் அருள் கிடைக்க வேண்டும் என்று அவர் கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் சென்றபோது அவர்கள் அங்கு ஒரு ஜன்னலைப் பார்த்தார்கள். அப்போது இதனை ஏன் நீங்கள் வைத்துள்ளீர்கள்? என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு குளிர்ந்த காற்று வந்து கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக வைத்துள்ளேன் என்று அவர் பதில் கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் இதன் மூலம் பாங்கின் ஓசை கேட்க வேண்டும் என்ற எண்ணம் உனக்க இருந்திருந்தால் குளிர்ந்த காற்றும் வந்து கொண்டே இருந்திருக்கும். நற்கூலியும் கிடைத்திருக்கும் என்று கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 603-604)

அல்லாஹ்வுக்கு நன்றி. அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எத்தகைய அன்பான ஜமாஅத்தை வழங்கியுள்ளான் என்றால் அதிலுள்ள பல மக்களும் மார்க்கத் தொண்டுகள் செய்வதை விரும்புகின்றனர். எவர்களுக்கு ஒருமுறை இந்த ஆர்வம் ஏற்பட்டு விடுமோ அவர்களது வீடு கூட ஜமாஅத் அலுவலகமாக காட்சி அளிக்கின்றது. அவர்கள் பேசுவது மார்க்க விஷயங்களாகவே இருக்கும். அவர்களது நண்பர்கள் கூட பொதுவாக ஏதாவதொரு வகையில் மார்க்கத்திற்கு தொண்டு செய்யக்கூடியவர் -களாகவே இருப்பர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: உலகியல் மகத்துவம் கூட மார்க்கத்தின் மூலமாகவே கிடைக்கின்றது.

எனவே எவர்களுக்கு இப்போது இதற்கான நல்வாய்ப்பு கிடைக்கவில்லையோ அவர்கள் முன்னே வாருங்கள். ஜமாஅத் தொண்டுகளைச் செய்வதற்காக உங்களை நீங்களே அர்ப்பணியுங்கள். இவ்வாறு உங்களது மார்க்க மற்றும் உலக முன்னேற்றத்திற்கான வழிவகைகளை செய்து கொள்ளுங்கள். அல்லாஹ்விடமிருந்து இறங்குகின்ற அருள்களை அவை உங்களுக்கு கிடைப்பதன் மூலமாகவும் பாருங்கள். அல்லாஹ் உங்களுக்கு இந்த போதனை -களின்படி செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

---

*(7-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

இருக்கின்றார்களோ அவர்களுக்கு இதைப் பற்றி தெரிவியுங்கள். மேலும் சுயமே உங்களையும் உங்களது குடும்பத்தினரையும் கிலாஃபத்தின் இந்த அருளுக்குரிய அமைப்புடன் எந்த அளவு நீங்கள் ஒன்றச் செய்து விட வேண்டும் என்றால், எந்தவொரு திட்டமும் எந்தவொரு சந்தேகமும் எந்தவொரு உலகப் பேராசையும் எந்தவொரு உலகவாதியின் மிரட்டலும் உங்களுக்கு காலத்தின் கலீஃபாவோடு இருக்கும் தொடர்பை எந்தவொரு தீய தாக்கத்தையும் ஏற்படுத்தி விடக் கூடாது. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை உங்களுக்கு வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad